**செய்தி வெளியீடு எண்: 326** **நாள்: 13.05.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (13.5.2018) சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக பணியாற்றிய காலத்திலே போடப்பட்ட திட்டங்கள் இன்றைக்கு அம்மாவினுடைய அரசு நிறைவேற்றி, இன்றைக்கு இந்த உயர்மட்ட புதிய பாலத்தை திறக்கின்ற நிகழ்ச்சி, ஏற்கனவே இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே அனுமதிக்கப்பட்டு தற்போது அதை நடைமுறைக்கு கொண்டுவருவதற்காக அடிக்கல் நாட்டு விழா மற்றும் புதிய காவல் நிலையங்கள் துவக்க விழா, மாநகர காவல் ஆணையம் சார்பில் தயாரிக்கப்பட்ட சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறும்பட குறுந்தகடு வெளியீட்டு விழா ஆகிய விழா நிகழ்ச்சியில் வரவேற்புரை நிகழ்த்திய மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை வகித்து முன்னிலை உரையாற்றிய சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய திரு வி.பன்னீர்செல்வம் அவர்களே, முன்னிலை உரையாற்றிய சேலம் மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய திரு.ஜி.வெங்கடாசலம் அவர்களே, சேலம் மாநகர காவல் ஆணையர் அவர்களே, கோவை மேற்கு மண்டலத்தின் காவல்துறை தலைவர் அவர்களே, சேலம் சரகத்தினுடைய காவல்துறை துணைத்தலைவர் அவர்களே, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களே மற்றும் நெடுஞ்சாலைத் திட்ட கண்காணிப்பு பொறியாளர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை, நபார்டு மற்றும் கிராம சாலையினுடைய கண்காணிப்பு பொறியாளர் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.பி.ஆர்.சுந்தரம் அவர்களே, திரு கே.காமராஜ் அவர்களே, முன்னாள் அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர் திரு.செம்மலை அவர்களே, சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு.ஏ.பி.சக்திவேல் அவர்களே, திரு.எஸ்.ராஜா அவர்களே, திரு.எஸ்.வெற்றிவேல் அவர்களே, திரு. ஆர்.எம்.சின்னத்தம்பி அவர்களே, திரு.அ.மருதமுத்து அவர்களே மற்றும் மத்திய மாவட்ட கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு.இளங்கோ அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவர் திரு.சின்னசாமி அவர்களே, முன்னாள் மேயர் திரு சவுண்டப்பன் அவர்களே, திரு.ஏ.கே.செல்வராஜ் அவர்களே, கழகத்தினுடைய முன்னோடி பொறுப்பாளர்களே, அரசு உயர் அதிகாரிகளே, முன்னாள் உள்ளாட்சி அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகளே, கூட்டுறவு சங்க நிர்வாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, கழக உடன்பிறப்புகளே, சகோதரிகளே,

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, இறுதியாக நன்றியுரை ஆற்ற இருக்கின்ற கட்டமைப்பு, பராமரிப்புத் துறையின் நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்பு பொறியாளர் அவர்களே, அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்

இன்றைய தினம், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்திலே நம்முடைய சேலம் மாநகர் மக்களுடைய நீண்ட நாட்கள் கோரிக்கை, சேலத்தின் புறவழிச்சாலை பகுதியான பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே அடிக்கடி போக்குவரத்து நெரிசல், காலையிலும், மாலையிலும் பள்ளிக்குச் செல்கின்ற மாணவர்கள், வேலைக்குச் செல்கின்ற பணியாளர்கள், வியாரிகள், பொதுமக்கள் ஆகியோர் பாதிக்கப்படுகின்றார்கள். பள்ளிக்கு செல்லும் மாணவ மாணவியர்கள் பள்ளிக்கு சரியான நேரத்தில் செல்ல முடிவதில்லை, பணிக்கு செல்லும் ஊழியர்கள் சரியான நேரத்தில் பணிக்கு செல்ல முடிவதில்லை. ஒரு சில நேரங்களில், ஏவிஆர் ரவுண்டானா, திருவாகவுண்டனூர் ரவுண்டானா ஆகிய இடங்களில் கிட்டத்தட்ட அரை மணி நேரம், முக்கால் மணி நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு செல்லமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையை தவிர்க்க வேண்டும் என்பதற்காக, பொதுமக்களுடைய கோரிக்கைகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகள் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன், மாண்பமிகு அம்மா அவர்கள் தெரிவித்தார்கள். இது தேசிய நெடுஞ்சாலை ஆயிற்றே, இதற்கு ஏற்கனவே சுங்க கட்டணம் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள், நாம் எப்படி பாலம் கட்ட முடியும் ? மாநில நிதியிலிருந்து எப்படி இதற்கு செலவழிக்க முடியும் ? ஆகவே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தான்இதற்கு பாலம் கட்ட வேண்டும், அதற்கு நீங்கள் முயற்சி செய்யுங்கள் என்று சொன்னார்கள். நான் பலமுறை மத்திய தரைவழி போக்குவரத்திற்கு கடிதம் எழுதப்பட்டது, அவர்கள் அதை பொருட்படுத்தவில்லை. மீண்டும் அம்மாவை சந்திக்கின்ற ஒரு சூழ்நிலை வருகின்றபொழுது, மாண்புமிகு அம்மாவிடத்திலே சொன்னேன், நீங்கள் தெரிவித்தபடி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தான் இந்த பாலத்தை கட்டவேண்டும், அவர்கள் பராமரிக்கப்படுகின்ற சாலை, இருந்தாலும் நாம் கடிதம் எழுதினோம், அதற்கு பதிலும் கிடைக்கவில்லை. அந்தத் திட்டத்தை அவர்கள் நிறைவேற்றவில்லை. ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அருள்கூர்ந்து காலையிலும், மாலையிலும் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றன, இந்த போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைப்பதற்காக இந்த இரண்டு இடத்திலும் ஒரு உயர்மட்ட பாலத்தை கட்டிக் கொடுங்கள் என்று முதல் கோரிக்கையாக வைத்தோம். கிட்டத்தட்ட மூன்று பாலங்கள், ஏவிஆர் ரவுண்டானா, திருவாகவுண்னூர் ரவுண்டானா, இரும்பு ஆலை சந்திப்பு மூன்று பாலத்திற்கும் கிட்டத்தட்ட 125 கோடி ரூபாய்க்கு மேல் ஆகிறது, மாநில வருவாயிலிருந்துதான் இதை

செலவழிக்கும் சூழ்நிலை இருக்கிறது, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் பராமரிக்கின்ற சாலையை நம்முடைய மாநில நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இருந்தாலும் மக்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்காக நீங்கள் கேட்கிறீர்கள் என்று சொல்லி உடனடியாக கையெழுத்து போட்டு அனுமதி கொடுத்து மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய நினைவாக இன்றைக்கு காட்சி அளிக்கின்றது. ஒரு தலைவர் பிறக்கின்றார், வாழுகின்றார், மறைகின்றார், அவர் இருக்கின்ற காலத்திலே அவர் வகிக்கின்ற பதவி இருக்கின்றபொழுது, நாட்டு மக்களுக்கு என்ன செய்தார் என்பது தான் என்றென்றைக்கும் மக்கள் மனதிலே நிலைத்திருக்கும். ஆகவே, இந்தப் பாலம் நம் அனைவருடைய நெஞ்சிலே நிலைத்திருக்கின்ற அளவிற்கு மாண்புமிகு அம்மா அனுமதி கொடுத்து, இன்றைக்கு அம்மாவினுடைய அருள் ஆசியால், ஏற்கனவெ திருவாகவுண்டனூர் ரவுண்டானா பாலம் கட்டி முடிக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டது. இப்பொழுது உரிய காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டு, ஏவிஆர் ரவுண்டானாவிலிருந்து உயர்மட்ட பாலம் கட்டி முடிக்கப்பட்டு, இன்று அம்மாவினுடைய ஆசியால் திறக்கப்பட்டிருக்கின்றது. இதுதான் அம்மாவினுடைய அரசு. எந்தத் திட்டத்தை போட்டாலும், உரிய காலத்திற்கு நிறைவேற்றக்கூடிய அரசு அம்மாவினுடைய அரசு தான். அதற்குப் பிறகு இரும்பு ஆலை சந்திப்பில் மத்திய தரைவழி அமைச்சகத்திற்கு நமக்கு அனுமதி கொடுக்காத பிறகுதான் அனுமதி கிடைத்தது. நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் பலமுறை சென்று தரைவழி போக்குவரத்துத் துறை அதிகாரியிடத்தில் தெரிவித்து அமைச்சரிடத்திலே தெரிவித்து அதற்கு உடனடியாக அனுமதி கொடுத்தார்கள், அந்தப் பணியும் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஐந்து ரோட்டில் தமிழ்நாடு அரசு நிதியிலிருந்து ஒரே திட்டத்திற்கு 320 கோடி ரூபாய் வழங்கிய வரலாறு கிடையாது, சேலத்திற்கு தான் ஒரே பாலத்திற்கு 320 கோடி ரூபாய் கொடுத்தார்கள். இங்கிருந்தும், ஒமகூலூரிலிருந்தும், ஏற்காட்டிலிருந்தும் போகலாம். ஆகவே, எல்லா பகுதியில் செல்கின்ற வாகனங்கள் தங்குதடையில்லாமல், நெரிசல் இல்லாமல் செல்வதற்கு 320 கோடி ரூபாய் அம்மா கொடுத்து, அதுவும் மிக வேகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோல மணல்மேட்டில் இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டு விட்டது. அந்தப் பாலம் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படும். லீ பஜார் பாலம் நிலம் எடுக்கும் பிரச்சினையினால் காலதாமதம் ஏற்பட்டு விட்டது. இருந்தாலும், அந்தப் பணியை வேகமாக முடிப்பதற்கு அவர்களோடு பேசி, சமாதானப்படுத்தி, ஒப்புதலைப் பெற்று அந்தப்பணி குறுகிய காலத்திலே முடிக்கப்பட்டு அந்தப் பாலம் திறக்கப்படுகின்ற பொழுது லீ பஜாருக்கு செல்லுகின்ற கனரக வாகனங்கள் தடையில்லாமல், போக்குவரத்து நெரிசல் இல்லாமல் செல்லமுடியும். அங்கு போக்குவரத்து நெரிசல் இல்லாத

சூழ்நிலை உருவாக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னோம். அந்த ரயில்வே கடவிற்கு குறுக்கே ஒரு உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு அனுமதி கொடுத்து அந்தப் பாலம் முடிகின்ற தருவாயில் இருக்கின்றது. எங்கெங்கே பாலங்கள் கேட்டோமோ அங்கெல்லாம் பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளன. முள்வாரி கேட் டெண்டர் விடப்பட்டது, அந்த டெண்டர் ஒப்பந்ததாரர் அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதன் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதுவும், ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு அங்கேயும் விரைவில் அடிக்கல் நாட்டப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திலேயே எந்த ஒரு மாவட்டத்திற்கும் இல்லாத அளவிற்கு சேலம் மாவட்டத்திற்கு தான் ஒரே நேரத்தில் அதிக பாலத்தை கொடுத்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். வீரபாண்டியிலே **ஆட்டையாம்பட்டி, மொசக்காலிப்பட்டி** கிலோமீட்டர் 2/2 புதிய பாலம் 3.5 கோடி மதிப்பீட்டிலும், ஆத்தூரில் கொத்தம்பாடி கல்பவனர் சாலை உயர் மட்ட பாலம் சுமார் 4.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு, இன்று என்னால் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதே போல ஆத்தூர் நகருக்கு புறவழிச்சாலை வேண்டும் என்று கோரிக்கையும் இன்றைக்கு 55 கோடி ஆத்தூர் நகருக்கு புறவழிச்சாலைஅமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். காரமங்கலத்தில் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்கு புறவழிச்சாலை அமைக்கவேண்டுமென்ற கோரிக்கையை அம்மாஅவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்று, ஒரு புறவழிச்சாலைக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு சேலம் மாவட்டத்திலிருந்து நெடுஞ்சாலைத் துறை மூலமாக 2514 கிலோமீட்டர் சாலைகள் இருக்கின்றன. 2011–2016 வரைக்கும் 1482 கி.மீ சாலைகள் 729 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பராமரிக்கப்பட்டிருக்கின்றது. 46 பாலங்கள் இதுவரை 133.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளன. 2016–2017 ஆம் ஆண்டில் 401 கி.மீ சாலைகள் 229 கோடி ரூபாய் மதிப்பிலும், 4 பாலங்கள் 1.25 மதிப்பீட்டிலும் முடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துக் கொள்கின்றேன். வருகின்ற 2017–2018 ஆம் ஆண்டு 102.45 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் சுமார் 76 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 13 பாலங்கள் சுமார் 523.36 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்கை பேணிக் காக்கின்ற சேலம் மாவட்டம் ஆத்தூர் காவல் நிலையத்தை ஊரக காவல் நிலையம் மற்றும் நகர காவல் நிலையம் என இரண்டாக பிரித்து, ஆத்தூர் நகர காவல்நிலையம் இன்றையதினம் துவக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஏத்தாப்பூர் காவல் நிலையத்தை இரண்டாக பிரித்து ஏத்தாப்பூர் காவல்நிலையம் மற்றும் கருமந்துரை காவல்நிலையம் என இரண்டாகப் பிரிந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

புதிய கருமந்துரை காவல் வட்டம் ஆய்வாளர் தலைமையில் கருமந்துரை மற்றும் களியக்கோவில் காவல் நிலையத்தை உள்ளடக்கி அந்த காவல் நிலையமும் திறக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பசுமை வழிச்சாலை மிகமிக முக்கியம். நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி உள்கட்டமைப்பை பொறுத்துதான் இருக்கிறது. இன்றைக்கு நாளுக்குநாள் படித்தவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்லும் பொழுது அவர்களுக்கு வேண்டிய வேலைவாய்ப்பை உருவாக்கித்தரவேண்டும். அப்படியென்றால் புதியபுதிய தொழில் துவக்கப்படவேண்டும். அப்படி புதியபுதிய தொழில் துவக்கப்படவேண்டும் என்றால் தேவையான உள்கட்டமைப்பு இருந்தால்தான், புதிய தொழில்முனைவோர் முன்வருவார்கள். ஆகவேதான், பசுமை வழிச்சாலையின் மூலமாக நம்முடைய பகுதி வளர்ச்சி அடைவதற்கு இந்த திட்டத்தை விரைவிலே கொண்டு வருவதற்கு அம்மாவினுடைய அரசு மத்திய அரசின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே இரண்டாவது பசுமை வழிச்சாலை திட்டம். இந்த பசுமை வழிச்சாலை திட்டம் நிறைவேற்றிகின்ற பொழுது, நம்முடைய வடக்கு மாவட்டம், மேற்கு மாவட்டத்தை பொறுத்தவரைக்கும் ஒரு நல்ல வளர்ச்சியை காணமுடியும் என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த பசுமை வழிச்சாலை வருகின்றபொழுது கனரக வாகனங்களும் அந்த வழியாக செல்கின்றது, விபத்துக்கள் குறைகின்றன, எரிபொருள் சிக்கனம் ஏற்படுகின்றது, குறைந்த நேரத்திலே உரிய இடத்திற்கு செல்ல முடிகின்றது. இவ்வளவு வசதிகள் இருப்பதால் தான் தொழில் வளம் பெருகும். உள்கட்டமைப்பு வசதி எவ்வளவு இருக்கின்தோ, அந்த அளவுக்கு தொழில் வளம் பெருகுவதற்கான வாய்ப்பு இருக்கிறது, அந்த அடிப்படையிலே தான் இந்த பசுமை வழிச்சாலையை சேலத்தில் இருந்து சென்னை வரை திட்டம் தீட்டப்பட்டுள்ளது, விரைவிலே நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, ஏர்போர்ட் போல பஸ்போர்ட், எல்லா வசதிகளும் கூடிய பஸ் போர்ட் ஒன்று அமைக்க மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மத்திய அரசின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். ஏர்போர்ட்டில் இருப்பது போன்று எல்லா வசதிகளும் பஸ் போர்ட்டில் இருக்கின்றது.

சாலையை விரிவுபடுத்துகின்ற ஒரு திட்டம். திருச்செங்கோடு, சங்ககிரி, ஓமலூர் வரை நான்கு வழி சாலையை உருவாக்குவதற்கு விரைவிலே ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. அதேபோல, ஈரோடு–பவானி, பவானி–மேட்டூர், மேட்டூர்–தொப்பூர் அந்த சாலையும் அகலப்படுத்தப்பட இருக்கின்றது. மத்திய பாதுகாப்புத் துறைக்கு தேவையான உதிரி பாகங்கள்

நம்முடைய சேலம் மாவட்டத்திலே உற்பத்தி செய்யக்கூடிய சிறு சிறு நிறுவனங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையும் மத்திய அரசிடம் வைத்திருக்கின்றேன். அப்படி பாதுகாப்புத் துறைக்கு உதிரி பாகங்கள் செய்யக்கூடிய தொழிற்சாலைகள் சேலம் மாவட்டத்திற்கு வருகின்றபொழுது நம்முடைய மாவட்டத்திலே படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெருகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம், வேளாண் பெருமக்கள் நிறைந்த பகுதி, ஆகவே, வேளாண் பெருமக்களுக்கு தேவையான நீர்நிலை முக்கியம். ஆகவே, நீரை சேமிப்பதற்கு பல்வேறு வகையிலே அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. குடிமராமத்து திட்டத்தின் மூலமாக ஏரிகளை ஆழப்படுத்துவது, பலப்படுத்துவது போன்ற பணிகளும் செய்யப்படுகின்றன. ஆங்காங்கே இருக்கின்ற நதிகள், ஓடைகள் வழியாக தடுப்பணை கட்டப்பட்டு பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் வீணாகாமல் தடுத்து நிறுத்தி நிலத்தடி நீரை உயர செய்து வேளாண் பெருமக்களுக்கு தேவையான நீர் கிடைப்பதற்கான வழிமுறையை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு எடுத்திருக்கின்றது. ஒரு மூன்றாண்டுகள் திட்டமாக உருவாக்கப்பட்டு, அதற்காக 1000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, முதல் கட்டமாக 350 கோடி ரூபாயிலே அந்த தடுப்பணை கட்டுகின்ற பணியும் துவங்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாம் கட்ட பணி துவங்குவதற்காக 1511 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. அந்த ஏரிகளுக்கு முழுக்க முழுக்க விவசாயிகளையே பயன்படுத்தி நிறைவேற்ற இருக்கின்றோம். அந்த பாசன விவசாயிகள் சங்க அந்த நிர்வாகத்திடமே நாம் ஒதுக்கப்படுகின்ற நிதியை அவர்களுக்கு கொடுத்து, அவர்களே அந்தப் பணியை செய்து முடிக்கின்ற ஒரு திட்டத்தை குடிமராமத்து திட்டத்தின் மூலமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் வீணாகாமல் அந்த ஏரியிலே சேமித்து, விவசாயிகளுக்கு தேவையான நீரை பயன்படுத்தக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசுதான் உருவாக்கிக் கொடுத்துள்ளது, வேறு எந்த அரசும் உருவாக்கவில்லை.

இன்றைக்கு பலபேர் பேசுகிறார்கள், அதை செய்தேன், இதை செய்தேன் என்று. இவ்வளவு திட்டங்களை நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். கடந்த கால ஆட்சியாளர்கள் மக்களுக்கு எந்த ஒரு பயனுள்ள திட்டத்தையாவது தந்தார்களா ? எதுவுமே கிடையாது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் பல்வேறு திட்டஙகளை நாட்டு மக்களுக்கு அளித்து, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு அதை தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஓமலூர், தாரமங்கலம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதியிலே கடந்த கால வறட்சியின் போது நான் சுற்றிப் பார்க்கின்றபொழுது நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபொழுது, அந்தந்த மாவட்ட

அமைச்சர்கள் வறட்சி பாதித்த பகுதிகளுக்கு சென்று தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்பொழுது பல்வேறு விவசாயிகள் காய்கறிகளை பயிரிட்டிருக்கின்றார்கள், தக்காளி பயிரிட்டு அதிகமாக விளைச்சல் வருகின்றபொழுது, அது விலை குறைகின்றது. அதிகமாக விளைச்சல் உற்பத்தி ஆகின்றபொழுது, அந்த நஷ்டத்தை போக்குகின்ற வகையில், அரசு ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி ஓமலூர் தாரமங்கலத்திற்கு இடையிலே பிரம்மாண்டமான காய்கறி மார்க்கெட் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலமாக பழங்கள், காய்கறிகள் சேமித்து வைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, விலை வீழ்ச்சி அடைகின்றபொழுது அதில் வைத்துக் கொள்ளலாம், விலை ஏறுகின்றபொழுது எடுத்து அதை விற்பனை செய்கின்றபொழுது விவசாயிகள் நஷ்டத்திலிருந்து காக்கப்படுகின்ற சூழ்நிலையை உருவாக்க இன்றைக்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நீரினுடைய அவசியம் மிக முக்கியம். எல்லா நதிகளுமே பக்கத்து மாநிலத்திலிருந்து உற்பத்தியாகிதான் நம்முடைய மாநிலத்திற்கு வருகிறது. காவிரி கர்நாடகத்தில் உற்பத்தியாகிறது, முல்லைப் பெரியாறு அணை கேரளாவில் உற்பத்தியாகிறது, பாலாறு ஆந்திராவிலிருந்து உற்பத்தியாகிறது. இதற்கு ஒரு நிரந்தர தீர்வு காணவேண்டும் என்பதற்காக மத்திய அரசிடம் நான் வலியுறுத்திச் சொன்னேன். மத்திய நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் திரு.நிதின் கட்கரி அவர்கள் சென்னைக்கு வருகை தந்தபொழுது என்னிடத்தில் சொன்னார்கள், நீங்கள் கடிதம் எழுதினீர்கள், பாரத பிரதமிடத்திலும் கோரிக்கை வைத்தீர்கள். இன்றைக்கு கோதாவரி, காவிரியை இணைக்கின்ற மிகப் பெரிய திட்டத்தை நாங்கள் உருவாக்க இருக்கின்றோம், ஆகவே, கோதாவரியில் அதிக நீர் வருகின்றது. அந்த நீரை தெலுங்கானா, ஆந்திரா வழியாக தமிழகத்திற்கு கொண்டுவந்து நம்முடைய பகுதியாகிய மாயனூர் கேரேஜ் என்னும் இடத்தில் அந்த தண்ணீரை கொண்டு வந்து இணைக்க வேண்டும். அப்படி கோதாவரி தண்ணீர் 125 டி.எம்.சி. நமக்கு கொடுப்பதாக மத்திய அரசால் திட்டம் தீட்டப்படுகிறது. இதன் மூலம் அந்த பகுதி மக்களுக்கு நிலையான நீர் கிடைக்கும். மேட்டுர் அணையில் இருக்கும் அந்த நீர் சேலம் மாவட்டம், நாமக்கல் மாவட்டம் மற்றும் திருச்சி மாவட்டம் வரை கால்வாய் வெட்டி அதன் மூலமாக ஆங்காங்கு இருக்கின்ற ஏரிகளை நிரப்புகின்ற பொழுது மூன்று மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயிகள் பயனடைவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே வேளாண் துறை, மருத்துவத் துறை, அனைத்துத் துறைகளிலும் முதன்மையாக விளங்கக்கூடிய நிலை தமிழகத்திலே பார்க்க முடிகின்றது. கல்வித் துறையில் இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை தமிழகம் தான்

முன்னிலை வகிக்கின்றது. சாலை போக்குவரத்திலும் தமிழகத்தில்தான் சாலை சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது என்று மத்திய அரசே கூறியிருக்கிறது. அந்த அளவிற்கு அம்மாவினுடைய அரசு எல்லா துறைகளிலும் வளர்ச்சியை காண்பதற்கு திட்டங்களை தீட்டியிருக்கிறது என்பதை சுட்டிக் காட்டி, அம்மாவினுடைய அரசு உங்களுடைய அரசு, ஏழை எளிய மக்களின் அரசு, மக்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து அதை நிறைவேற்றக்கூடிய ஒரு அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி மிகச் சிறப்பாக, துரிதமாக இந்த பாலப்பணியை குறுகிய காலத்திற்குள் முடித்த ஒப்பந்ததாரர்களுக்கும், நிறைவேற்றுவதற்கு துணையாக நின்ற நெடுஞ்சாலைத் துறையை சேர்ந்த அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

---

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**